# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

# 1988 ஆம் ஆண்டின் 73 ஆம் இலக்க, பண்பாட்டுச் சொத்துச் சட்டம்

---

*[1988, திசெம்பர் மாதம் 17 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

**1988, திசெம்பர் 23 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டுள்ளது.**

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

---

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா 1.20 தபாற் செலவு: சதம் 75

# 1988 ஆம் ஆண்டின் 73 ஆம் இலக்க, பண்பாட்டுச் சொத்துச் சட்டம்

[1988, திசெம்பர் மாதம் 17 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச.வ.—ஓ 23/79

**பண்பாட்டுச் சொத்தை ஏற்றுமதி செய்வதைக் கட்டுப்படுத்துவதற்கு ஏற்பாடு செய்வதற்கும், பண்பாட்டுச் சொத்தைக் கையாளுவதற்காக உரிமமளித்தல் திட்டமொன்றை ஏற்பாடு செய்வதற்கும்; அத்துடன் அவற்றேடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கும் ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினல் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம் 1988 ஆம் ஆண்டின் 73 ஆம் இலக்க, பண்பாட்டுச் சொத்துச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். **சுருக்கப்பெயர்.**

## பாகம் I

## பண்பாட்டுச் சொத்தை ஏற்றுமதி செய்தல்

**உரிமத்தின் மீதன்றிப் பண்பாட்டுச் சொத்தை ஏற்றுமதி செய்வதைத் தடைசெய்தல்.**

2. (1) இதனகத்துப்பின்னர் "கட்டுப்பாட்டாளர்" எனக் குறிப்பீடு செய்யப்படும், ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளரினல் வழங்கப்படும் விதித்துரைக்கப்பட்ட படிவத்திலான ஓர் உரிமத்தின் மீதன்றியும் அத்துடன் விதித்துரைக்கப்பட்ட கட்டணமொன்றைச் செலுத்துவதன்மீதன்றியும், ஆளெவரும், ஏதேனும் பண்பாட்டுச் சொத்தை இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்தலோ அல்லது ஏற்றுமதி செய்ய எத்தனித்தலோ ஆகாது.

(2) இப்பிரிவு, சுங்கக் கட்டளைச்சட்டத்தின் பாகமாக அமைகிறது என்றுற்போன்று பயனுடையதாதல் வேண்டுமென்பதுடன், அக்கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்க ஏற்புடையனவாதலும் வேண்டும்.

**பண்பாட்டுச் சொத்தை ஏற்றுமதி செய்வதற்கான உரிமத்துக்கான விண்ணப்பம்.**

3. (1) இரண்டாம் பிரிவின்கீழான ஓர் உரிமத்துக்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும் விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் கட்டுப்பாட்டாளருக்குச் செய்யப்படுதல் வேண்டும் என்பதுடன் தொல்பொருளியல் ஆணையாளரிடமிருந்து பெறப்பட்ட, விண்ணப்பகாரருக்கு அத்தகைய உரிமத்தை வழங்க அவருக்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை எனக் குறிப்பிட்ட, கூற்றையும் அத்துடன் இணைத்தல் வேண்டும்.

(2) (அ) தொல் பொருளியல் ஆணையாளரினல் வழங்கப்பட்ட கூற்றும், அவர் அத்தகைய உரிமத்தை வழங்க ஆட்சேபித்திருக்குமிடத்து ; அல்லது

(ஆ) ஏற்றுமதி செய்வதற்கு நாடப்படும் ஏதேனும் பண்பாட்டுச் சொத்து இலங்கையிலுள்ள ஏதேனும் அரும்பொருட்சாலைக்குத் தேவைப்படும் சொத்தென அவர் அபிப்பிராயப்படுமிடத்து,

கட்டுப்பாட்டாளர், உரிமமொன்றை வழங்க மறுத்தல் வேண்டும்.

**உரிமம் வழங்க மறுத்தமைக்கு எதிரான மேன்முறையீடு.**

4. (1) மூன்றும் பிரிவின்கீழ் கட்டுப்பாட்டாளர் ஏதேனும், உரிமத்தை வழங்க மறுத்தமையினல் இன்னலுறும் எவரேனுமாள், (இதனகத்துப்பின்னர் "செயலாளர்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) பண்பாட்டு அலுவல்கள் என்ற விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சுக்கான செயலாளருக்கு அத்தகைய மறுப்புக்கெதிராக மேன்முறையீடு செய்யலாம்.

(2) செயலாளரானவர், (1) ஆம் உட்பிரிவின்கீழ் அவருக்குச் செய்யப்பட்ட ஏதேனும் மேன்முறையீட்டைக் கையாளுகையில் கட்டுப்பாட்டாளரின் எந்தத் தீர்மானத்துக்கெதிராக மேன்முறையீடானது செய்யப்பட்டதோ அத்தீர்மானத்தை உறுதிப்படுத்தலாம் அல்லது தள்ளிவைக்கலாம்.

அனுமதியின்றிப் பண்பாட்டுச் சொத்தை ஏற்றுமதி செய்வதற்கான தண்டம்.

5. எவரேனுமாள், தாமாகவோ அல்லது தமது சார்பில் வேறோர் ஆள் மூலமாகவோ 2 ஆம் பிரிவுக்கு முரணாக ஏதேனும் பண்பாட்டுச் சொத்தை ஏற்றுமதி செய்தால் அல்லது ஏற்றுமதி செய்ய எத்தனித்தால், சுங்கக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் எந்தப் பறிமுதலுக்கு அல்லது தண்டத்திற்கு அவர் ஆளாகக்கூடுமோ அந்தப் பறிமுதலுக்கு அல்லது தண்டத்திற்குப் பங்கமின்றித் தவறொன்றிற்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் நீதிவானொருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐயாயிரம் ரூபாவிற்கு மேற்படாத குற்றப்பணமொன்றிற்கு அல்லது மூன்று ஆண்டுகளுக்கு மேற்படாதவொரு காலப்பகுதிக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

கட்டுப்பாட்டாளரின் தத்துவங்களையும் கடமைகளையும் கையளித்தல்.

6. (1) கட்டுப்பாட்டாளர் உரிமம் வழங்குவதற்கான தத்துவத்தினை, தொல்பொருளியல் திணைக்களத்தின் அலுவலர் ஒருவருக்குக் கையளிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட அலுவலர் ஒவ்வொருவரும் அவருக்குக் கையளிக்கப்பட்ட தத்துவத்தை, கட்டுப்பாட்டாளரின் பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுக்கு அமைவாகப் பிரயோகித்தல் வேண்டும்.

## பாகம் II

### பண்பாட்டுச் சொத்துச் சபையைத் தாபித்தல்

பண்பாட்டுச் சொத்துச் சபையைத் தாபித்தல்.

7. இதனகத்துப்பின்னர் "சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும் பண்பாட்டுச் சொத்துச் சபை என அழைக்கப்படும் சபையொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

சபையின் அமைப்பு.

8. (1) சபையானது பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) தவிசாளராக இருக்கவேண்டியவரான, பண்பாட்டு அலுவல்கள் என்ற விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் ;

(ஆ) அரும்பொருட்சாலைகளின் பணிப்பாளர் ;

(இ) தேசிய சுவடிக்கூடப் பணிப்பாளர் ;

(ஈ) மத்திய சுற்றாடல் அதிகாரசபைத் தவிசாளர் ;

(உ) அமைச்சரினால் நியமிக்கப்பட்டவர்களும், பண்பாட்டுச் சொத்துத் தொடர்பிலான விடயங்களில் அனுபவமும் விசேட அறிவும் கொண்டவர்களுமான ஈருறுப்பினர்கள்.

(2) ஆளொருவர்—

(அ) பாராளுமன்ற உறுப்பினரொருவராக இருந்தால் அல்லது அவ்வாறு உறுப்பினராகினல் ; அல்லது

(ஆ) அவர் இலங்கைப் பிரசை ஒருவராக இல்லாதிருந்தால் அல்லது இலங்கைப் பிரசையொருவராக இல்லாதொழிந்தால்,

அவர் (1) ஆம் பிரிவின் (ஈ) என்னும் பந்தியின்கீழ் சபையின் உறுப்பினர் ஒருவராக நியமனம் செய்யப்படுவதற்கு அல்லது அவ்வாறு தொடர்ந்திருப்பதற்குத் தகைமையற்றவராதல் வேண்டும்.

(3) அமைச்சரினல் (1) ஆம் உட்பிரிவின் (ஈ) எனும் பந்தியின்கீழ் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் (4) ஆம் (5) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கு அமைய, மூன்று ஆண்டு காலப்பகுதிக்குப் பதவிவகித்தல் வேண்டும். ஆனல், மீள நியமிக்கப்படுவதற்குத் தகுதியுடையவராதலும் வேண்டும்.

(4) அமைச்சரானவர், (1) ஆம் உட்பிரிவின் (ஈ) எனும் பந்தியின்கீழ் நியமிக்கப்பட்ட சபையின் எவரேனும் உறுப்பினரை, அதற்கான காரணம் எதனையும் காட்டாது, பதவியிலிருந்து அகற்றலாம் என்பதுடன், அத்தகைய அகற்றுதலானது எந்த நீதிமன்றத்திலும் கேள்விக்குட்படுத்தப்படுதலுமாகாது.

(5) பந்தி (ஈ) என்பதன்கீழ் நியமிக்கப்பட்ட எவரேனும் உறுப்பினரின் பதவி வெற்றிடமாகும் சந்தர்ப்பத்தில் அல்லது முற்போந்த உட்பிரிவின் ஏற்பாட்டின்கீழ் பதவியிலிருந்து அவர் அகற்றப்படும் சந்தர்ப்பத்தில், அமைச்சர், அவர் எந்த உறுப்பினரைத் தொடர்ந்து பதவிக்கு வருகின்ருரோ அந்த உறுப்பினரின் பதவிக்காலத்தில் முடிவுருதெஞ்சியுள்ள காலப்பகுதிக்கு அத்தகைய பதவியை வகிப்பதற்கென வேருேர் ஆளை நியமிக்கலாம்.

(6) பந்தி (ஈ) என்பதன் கீழ் நியமிக்கப்பட்ட சபையின் எவரேனும் உறுப்பினர், சுகவீனம் காரணமாக அல்லது இலங்கையிலில்லாதிருப்பதன் காரணமாக அல்லது வேறேதேனும் காரணத்துக்காகத் தனது கடமைகளைத் தற்காலிகமாக நிறைவேற்ற இயலாதிருந்தால் அமைச்சரானவர் அவருக்குப் பதிலாக உறுப்பினராகச் செயலாற்றவென வேருேர் ஆளை நியமிக்கலாம்.

(7) சபையின் உறுப்பினர்களுக்கு நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஆலோசனையுடன் அமைச்சரினல் தீர்மானிக்கப்படக்கூடியவாறன அத்தகைய வீதங்களில் ஊதியமளிக்கப்படுதல் வேண்டும்.

9. (1) சபையானது, அதன் கூட்டங்கள் தொடர்பிலும் அத்தகைய கூட்டங்களின் போது அலுவல்களைக் கையாளுதல் தொடர்பிலும் அதன் நடவடிக்கையை ஒழுங்குபடுத்தலாம். சபையின் கூட்டங்களும் கூட்ட நடப்பெண்ணும்.

(2) சபையின் கூட்டமொன்றிற்கான கூட்டநடப்பெண் சபை வேறு வகையாகத் தீர்மானித்தாலொழிய, நான்கு உறுப்பினர்களாகவிருத்தல் வேண்டும்.

சபையின் தத்துவங்கள்.

10. (1) சபையானது, மதியுரைச் சபையொன்றாகவிருத்தல் வேண்டு மென்பதுடன், தொல்பொருள் ஆணையாளருக்கு அவர் தனது தத்து வங்களைப் பிரயோகிப்பதில் அல்லது அபிப்பிராயத்துக்கென சபைக்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ள வேறெவையேனும் விடயங்கள் பற்றி மதியுரை வழங்குதல் வேண்டும்.

(2) சபையானது அதன் தத்துவத்தினைப் பிரயோகிக்கையில், பண் பாட்டுச் சொத்துத் தொடர்பான விடயங்களில் விசேட அறிவும் அனுபவ மும் கொண்டுள்ளவரான எவரேனும் ஆளினது சேவைகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

## பாகம் III

### பண்பாட்டுச் சொத்தினைப் பதிவு செய்தல்

பதிவுசெய்யப் படவேண்டிய வகுதியினவான பண்பாட்டுச் சொத்தினை அமைச்சர் குறித்துரைத் தல்.

11. அமைச்சரானவர், சபையுடனான கலந்தாலோசனையுடனும், அமைச் சரவையின் அங்கீகாரத்துடனும் பின்வரும் பிரதிபலன்களை முறையாகக் கருத்தில் கொண்டு காலத்துக்குக்காலம் வர்த்தமானியில் வெளியிடப்படும் அறிவிப்பின் மூலம் இச்சட்டத்தின்கீழ் பதியப்பட்டிருக்கவேண்டிய பண் பாட்டுச் சொத்தினது வகுதிகளைக் குறித்துரைக்கலாம் :—

(அ) அத்தகைய வகுதியினதான பண்பாட்டுச் சொத்தினைப் பேணு வதற்கான அவசியம் ;

(ஆ) இலங்கையினுள் இலங்கையின் பண்பாட்டுப் பாரம்பரியத்தினை மேலும் சிறப்புறச் செய்வதற்காக, அத்தகைய பொருட்களைப் பாதுகாப்பதற்கான தேவை ;

(இ) இலங்கையின் பண்பாட்டுப் பாரம்பரியத்தினைப் பாதுகாப்பதற்கு உதவும் அல்லது உதவும் சாத்தியம் கொண்ட அத்தகைய பாதுகாப்பதற்கான தேவை ;

தனியார் உடைமையி லுள்ள பண் பாட்டுச் சொத் தைப் பதிவு செய்தல்.

12. பதினோராம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள அறிவிப்பில் குறித்துரைக்கப்பட்டுள்ள எதேனும் பண்பாட்டுச் சொத்தானது பதிவு செய்யும் அலுவலரினால் பதிவுசெய்யப்பட்டும் அத்துடன் அத்தகைய அலு வலர் அத்தகைய சொத்துத் தொடர்பில் பதிவுச் சான்றிதழொன்றை வழங்கியும் இருந்தாலன்றி அத்தகைய எதேனும் பண்பாட்டுச் சொத் தினை ஆளெவரும் சொந்தமாக வைத்திருத்தலோ அல்லது தமது கட்டுக் காவலில் அல்லது உடைமையில் வைத்திருத்தலோ ஆகாது.

அரசாங்க அதிபர் பதிவு செய்யும் அலுவலராக இருத்தல்.

13. அரசாங்க அதிபர் ஒருவர் எந்த நிருவாக மாவட்டத்திற்கென நிய மிக்கப்பட்டுள்ளாரோ அந்த நிருவாக மாவட்டத்திற்கான பதிவு செய் யும் அலுவலராக இருப்பதற்கென அந்த அரசாங்க அதிபரை அமைச்சர், வர்த்தமானியில் வெளியிடப்படும் அறிவிப்பு மூலம் 12 ஆம் பிரிவின் நோக்கங் களுக்காக நியமிக்கலாம்.

பதிவுச் சான்றிதழுக்கான விண்ணப்பங்கள்.

14. பதிவுச் சான்றிதழொன்றிற்கான விண்ணப்பமொன்றானது 11 ஆம் பிரிவின்கீழ் எக்காலப் பகுதிக்குள்ளாக செய்யப்படலாமோ அக்காலப் பகுதியை, அமைச்சர், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் விதித்துரைக்கலாம்.

பதிவுச் சான்றிதழை வழங்குதல்.

15. (1) பன்னிரண்டாம் பிரிவின்கீழ் பதிவுச் சான்றிதழொன்றைப் பெறுதல் வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட ஆளொவ்வொருவரும், அவர் எந்த நிருவாக மாவட்டத்தில் வதிகின்றாரோ அந்த நிருவாக மாவட்டத்தின் பதிவுசெய்யும் அலுவலருக்கு அந்நோக்கத்துக்கென விதித்துரைக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தில் அத்தகைய சான்றிதழுக்கான விண்ணப்பமொன்றைச் செய்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழான விண்ணப்பமொன்றைப் பெற்றதன் மேல் பதிவு செய்யும் அலுவலர் தக்கதெனத் தாம் கருதுகின்றவாறான அத்தகைய விசாரணையை நடத்திய பின்னர் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய விபரங்களைக் கொண்டுள்ள பதிவுச் சான்றிதழொன்றை வழங்கலாம்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் பெறப்பட்ட விண்ணப்பமொன்று நிராகரிக்கப்பட்டுள்ளவிடத்து, பதிவுசெய்யும் அலுவலர், அத்தகைய நிராகரிப்புக்கான தமது காரணங்களைக் கூறி எழுத்தில் விண்ணப்பகாரருக்கு அறிவித்தல் வேண்டும்.

(4) பதிவுச்சான்றிதழொன்றிற்கான விண்ணப்பமொன்று நிராகரிக்கப்பட்டுள்ளவிடத்து, விண்ணப்பகாரர், அத்தகைய நிராகரிப்புத் தேதியிலிருந்து பதிநான்கு நாட்களினுள் அத்தகைய நிராகரிப்புக்கெதிராகத் தொல்பொருளியல் ஆணையாளருக்கு மேன்முறையீடு செய்யலாம்.

(5) பதிவு செய்தலுக்கான விண்ணப்பமொன்றினை நிராகரிக்கும் தொல்பொருளியல் ஆணையாளரின் முடிபினால் இன்னலுறுகின்ற எவரேனும் விண்ணப்பகாரர், மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு, அத்தகைய முடிபிற்கெதிராக மேன்முறையீடு செய்யலாம்.

பதிவுசெய்யப்பட்ட ஏதேனும் பண்பாட்டுச் சொத்தின் சொத்துவக் கைமாற்றம் பதிவுசெய்யும் அலுவலருக்கு அறிவிக்கப்படுதல்.

16. பன்னிரண்டாம் பிரிவின்கீழ் பதிவுசெய்யப்பட்ட ஏதேனும் பண்பாட்டுச் சொத்தின் சொத்துவத்தை அல்லது கட்டுக்காவலை அல்லது உடைமையை எவரேனுமாள் கைமாற்றுமிடத்து, அத்தகைய ஆள், எந்த நிருவாக மாவட்டத்தினுள் வதிகின்றாரோ அந்த நிருவாக மாவட்டத்தின் பதிவுசெய்யும் அலுவலருக்கு அத்தகைய கைமாற்றம் பற்றிய நிகழ்வை அத்தகைய கைமாற்றம் செய்யப்பட்ட தேதியிலிருந்து பதினான்கு நாட்களினுள் அவர் அறிவித்தல் வேண்டும்.

தண்டம்.

17. (அ) ஏதேனும் பண்பாட்டுச் சொத்தைச் சொந்தமாக அல்லது தமது கட்டுக்காவலில் அல்லது உடைமையில் வைத்திருக்கும் ஆள் எவரும் 15 ஆம் பிரிவின்கீழ் விண்ணப்பமொன்றைச் செய்யத் தவறுகின்றவிடத்து ; அல்லது

(ஆ) ஆள்எவரும் ஏதேனும் பண்பாட்டுச் சொத்தின் சொத்துவத்தை அல்லது கட்டுக்காவலே, அல்லது உடைமையைக் கைமாற்றியிருப்பதுடன் 16 ஆம் பிரிவின்கீழ் அத்தகைய கைமாற்றத்தைப் பதிவுசெய்யும் அலுவலருக்கு அறிவிக்கத் தவறுகின்ற விடத்து அவர்,

தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் நீதிவானொருவரின் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப் பட்டதன்மேல், ஆயிரம் ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணமொன்றிற்கு அல்லது ஓராண்டுக்கு மேற்படாதவொரு காலப்பகுதிக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

## பாகம் IV

### பண்பாட்டுச் சொத்தைக் கொள்ளல், கொடுத்தல் செய்வதற்கான உரிமம்

**பண்பாட்டுச் சொத்தைக் கொள்ளல், கொடுத்தல் செய்வதற்கான உரிமம்.**

18. பத்தொன்பதாம் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட ஓர் உரிமத்தினது அதிகாரத்தின்கீழன்றி, ஆளெவரும் தாமாகவோ அல்லது தமது சார்பில் வேறெவரேனும் ஆள் மூலமாகவோ ஏதேனும் பண்பாட்டுச் சொத்தை விற்பனை செய்தல் அல்லது விற்பனை செய்ய முனைதல் ஆகிய தொழிலைக் கொண்டு நடாத்துதலாகாது.

**உரிமம் வழங்குதல்.**

19. (1) ஏதேனும் பண்பாட்டுச் சொத்தை விற்பனை செய்தல் ஆகிய தொழிலை அல்லது விற்பனை செய்ய முனைதல் ஆகிய தொழிலைக் கொண்டு நடாத்துவதற்கான உரிமமொன்றை தொல்பொருளியல் ஆணையாளர் பின்வருவனவற்றைக் கவனத்துட்கொண்ட பின்னர் எவரேனுமாளுக்கு வழங்கலாம் :—

(அ) அப்பண்பாட்டுச் சொத்தை வியாபாரம் செய்தல் தொடர்பில் விண்ணப்பகாரருக்கு உள்ள அனுபவம் ;

(ஆ) தொழில் கொண்டு நடாத்தப்படவுள்ள பட்டினம், கிராமம் அல்லது இடப்பரப்பு ; அத்துடன்

(இ) விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு கருமங்கள்.

(2) (அ) ஓராம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறான ஏதேனும் தொழிலைக் கொண்டுநடாத்துவதற்கான ஓர் உரிமத்துக்கான விண்ணப்பமொவ்வொன்றும் விதித்துரைக்கப்பட்ட கட்டணத்துடன் சேர்த்து அனுப்பப்படுதலும் வேண்டும்.

(ஆ) தொல்பொருளியல் ஆணையாளர், தக்கதெனத் தான் கருதுகின்றவாறான அத்தகைய விசாரணையை நடாத்திய பின்னர் ஓர் உரிமத்துக்கான விண்ணப்பகாரருக்கு அந்த உரிமத்தை வழங்கலாம் அல்லது வழங்க மறுக்கலாம் ;

(இ) தொல்பொருளியல் ஆணையாளர், விண்ணப்பகாரரொருவருக்கு ஓர் உரிமத்தை வழங்க மறுக்குமிடத்து அந்த உரிமத்தை வழங்க மறுத்தமையை அவர் விண்ணப்பகாரருக்கு அறிவித்தல் வேண்டும் ;

(ஈ) ஓராம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறான அத்தகைய ஏதேனும் தொழிலைக் கொண்டு நடாத்துவதற்கு அதிகாரமளிக்கின்ற உரிமம் ஒவ்வொன்றும் விதித்துரைக்கப்பட்ட ஒரு காலப்பகுதிக்காகவும் விதித்துரைக்கப்பட்ட படிவத்திலும் இருத்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய உரிமத்தினால் அதிகாரமளிக்கப்பெற்ற தொழிலானது இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கியதாகக் கொண்டு நடாத்தப்படுகின்றதென்பதனை உறுதிப்படுத்துவதற்கு அவசியமாகக்கூடியவாறான தொல்பொருளியல் ஆணையாளரால் அத்தகைய நியதி நிபந்தனைகளுக்கு அமைந்ததாக விருத்தலும் வேண்டும் ;

(உ) ஓராம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட ஓர் உரிமத்திலுள்ள ஏதேனும் நிபந்தனையை உரிமம்பெற்றவர் மீறினால் அல்லது அந்த நிபந்தனைக்கு இணங்கியொழுகத் தவறினால், தொல்பொருளியல் ஆணையாளர் அந்த உரிமத்தை இல்லாதாக்கலாம் ;

(ஊ) பந்தி (உ) என்பதன் கீழ் ஓர் உரிமத்தை தொல்பொருளியல் ஆணையாளர் இல்லாதாக்குமிடத்து, அத்தகைய இல்லாதாக்குகை பற்றிய அறிவித்தலை உரிமம் பெற்றவருக்கு அவர் கொடுப்பித்தல் வேண்டும்.

(எ) ஓர் உரிமத்தை வழங்க மறுத்து தொல்பொருளியல் ஆணையாளர் செய்யும் முடிவினால் இன்னலுறும் உரிமத்துக்கான விண்ணப்பகாரரொருவர், அல்லது ஓர் உரிமம் பெற்றவரின் உரிமத்தை இல்லாதாக்குதல் வேண்டுமெனத் தொல்பொருளியல் ஆணையாளர் செய்யும் முடிவினால் இன்னலுறும் அந்த உரிமம் பெற்றவர், அத்தகைய முடிவு செய்யப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்களினுள் செயலாளருக்கு அத்தகைய முடிவுக்கெதிராக எழுத்தில் மேன்முறையீடு செய்யலாம்.

*எந்த ஆட்களின் உரிமங்கள் இல்லாததாக்கப் பட்டுள்ளனவோ அந்த ஆட்கள் பண்பாட்டுச் சொத்தை வேறு உரிமம் பெற்றவர்களுக்கு விற்பனை செய்யலாம்.*

20. பதினெட்டாம் பிரிவிலுள்ள எது எப்படியிருப்பினும், 19 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (உ) எனும் பந்தியின்கீழ் எந்த ஆளின் உரிமம் இல்லாததாக்கப்பட்டுள்ளதோ அந்த எவரேனும் ஆள், அத்தகைய இல்லாதாக்குகைத் தேதிக்கு நேர்முன்னர் தமது சொத்துவத்திலும் கட்டுக்காவலிலும் உடைமையிலும் உள்ள எல்லாப் பண்பாட்டுச் சொத்துக்களும் பற்றி விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்குள்ளும் அத்தகைய படிவத்திலும் அத்தகைய முறையிலும் தொல்பொருளியல் ஆணையாளருக்கு எழுத்தில் வெளிப்படுத்துகையொன்றைச் செய்த பின்னர், 19 ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட வலிதான உரிமமொன்றை வைத்திருக்கின்ற வேறெவரேனும் ஆளுக்கு அத்தகைய பண்பாட்டுச் சொத்தை விற்பனை செய்யலாம் :

ஆயின், உரிமமானது இல்லாததாக்கப்பட்ட தேதியிலிருந்து ஆறு மாதங்களைக் கொண்ட காலப்பகுதிக்குப் பின்னர், அத்தகைய பண்பாட்டுச் சொத்து எதுவும் விற்பனை செய்யப்படுதலாகாது.

இச்சட்டத்தின் 18 ஆம், 19 ஆம், 20 ஆம் பிரிவுகளை மீறுகின்ற ஆளுக்குள்ள பொறுப்பு.

21. (அ) ஏதேனும் பண்பாட்டுச் சொத்தை 18 ஆம் பிரிவுக்கு முரணாகத் தாமாகவோ அல்லது தமது சார்பில் வேறெவரேனும் ஆள் மூலமாகவோ, இலங்கைக்கு வெளியேயுள்ள ஆள் ஒருவருக்கு விற்பனை செய்கின்ற அல்லது விற்பனை செய்ய எத்தனிக்கின்ற எவரேனுமாள் ; அல்லது

(ஆ) 19 ஆம் பிரிவின் அல்லது 20 ஆம் பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற எவரேனுமாள்

நீதிவானொருவர் முன்னராக சுருக்க விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ஐயாயிரம் ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது மூன்றாண்டுகளுக்குக் குறையாதவொரு காலப்பகுதிக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதல் வேண்டும்.

## பாகம் V

### தொல்பொருளியல் ஆணையாளரின் தத்துவங்களும் கடமைகளும்

தொல்பொருளியல் ஆணையாளரின் தத்துவங்கள்.

22. தொல்பொருளியல் ஆணையாளர் பின்வருவனவற்றைச் செய்வதற்கு இத்தால் தத்துவமளிக்கப்படுகிறார் :—

(அ) பன்னிரண்டாம் பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட வேண்டுமெனத் தேவைப்படுகின்ற வகையிலான பண்பாட்டுச் சொத்துப்பற்றிய ஒரு நிரலைத் தயாரித்தல் ;

(ஆ) பதிவு தேவைப்படுகின்றதான பண்பாட்டுச் சொத்தைப் பேணிக்காத்தல், பராமரித்தல், பழுதுபார்த்தல் அத்துடன் புனரமைத்தல் ;

(இ) பதிவு தேவைப்படுகின்றதான பண்பாட்டுச் சொத்தைப் பதிவு செய்தல், விற்பனை செய்தல், பாதுகாத்தல் ஆகியவற்றைக் கட்டுப்படுத்துதலும் நிருவகித்தலும் ;

(ஈ) பாராளுமன்றத்தினால் அந்நோக்கத்திற்கென வழங்கப்படக்கூடியவாறான அத்தகைய நிதிகளைக்கொண்டு பெறுமதிவாய்ந்த பண்பாட்டுச் சொத்தைக் கொள்வனவு செய்தல்.

தொல்பொருளியல் ஆணையாளரின் கடமைகள்.

23. இச்சட்டத்தினால் அல்லது இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியினால் அவருக்குக் குறித்தொதுக்கப்படுகின்ற அத்தகைய எல்லாக் கடமைகளையும் பணிகளையும் தொல்பொருளியல் ஆணையாளர் புரிதலும் நிறைவேற்றுதலும் வேண்டும்.

பண்பாட்டுச் சொத்தைச் சோதனையிடுவதற்கான தத்துவம்.

24. (1) தொல்பொருளியல் ஆணையாளர், அல்லது அந்நோக்கத்திற்கென அவரால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர், எவரேனுமாளின் உடைமையிலுள்ள ஏதேனும் பண்பாட்டுச் சொத்தை, நியாயமான எல்லா நேரங்களிலும் சோதனையிடலாம் என்பதுடன், அத்தகைய சோதனையை அனுமதித்தலும் அத்தகைய பண்பாட்டுச் சொத்தைப் பற்றி ஆய்வு செய்வதற்கும் வாய்ப்புகள் தயாரிப்பதன்மூலம் அல்லது வேறெவையேனும் வழிவகைகள்மூலம் அதன் சித்திரங்களை, நிழற்படங்

களை அல்லது மீள்தோற்றங்களைத் தயாரிப்பதற்கும் நியாயமான எல்லா வசதிகளையும் தொல்பொருளியல் ஆணையாளருக்கு அல்லது அத்தகைய அலுவலருக்கு செய்து கொடுத்தலும் அத்தகைய ஆள் ஒவ்வொருவரினதும் கடமையாதலும் வேண்டும்.

ஆயின், அப்பண்பாட்டுச் சொத்தை உடைமையில் வைத்திருக்கும் ஆளின் சம்மதமின்றி, அத்தகைய சித்திரங்கள், நிழற்படங்கள் அல்லது மீள் தோற்றங்கள் எவையும் விற்பனை செய்யப்படுதலாகாது :

ஆயின் மேலும், பண்பாட்டுச் சொத்தை உடைமையில் வைத்திருக்கும் ஆளின் முற்சம்மதமானது, வார்ப்புகள் தயாரிக்கும்போது பெறப்படல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறுகின்ற எவரேனுமாள், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் நீதிவானொருவர் முன்னரான சுருக்க விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ஆயிரம் ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணத்திற்கு அல்லது மூன்று மாதங்களுக்கு மேற்படாதவொரு காலப்பகுதிக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

தொல்பொருளியல் ஆணையாளரினால் விடுக்கப்படும் பணிப்பு.

25. (1) எவரேனுமாளினால் சொந்தமாக வைத்திருக்கப்படுகின்ற அல்லது எவரேனும் ஆளின் கட்டுக்காப்பில் அல்லது உடைமையிலுள்ள தேசிய முக்கியத்தும் வாய்ந்த ஏதேனும் பண்பாட்டுச் சொத்து அழிக்கப்படும், அழிந்துபோகும், துஷ்பிரயோகம் செய்யப்படும் அல்லது அழிந்து போக விட்டுவிடப்படும் ஆபத்தில் இருக்கின்றதென தொல்பொருளியல் ஆணையாளர் அபிப்பிராயப்படுகின்றவிடத்து அல்லது அத்தகைய சொத்தின் தன்மை மாற்றப்படவுள்ளவிடத்து, மாறுகின்றவிடத்து அல்லது மாற்றப்பட்டுள்ளவிடத்து அவர், சபையின் ஒருப்பாட்டுடன் அத்தகைய சொத்தைப் பாதுகாக்குமாறு அத்தகைய பண்பாட்டுச் சொத்தின் சொந்தக்காரருக்கு அல்லது அதன் கட்டுக்காப்பை அல்லது உடைமையை வைத்திருக்கும் ஆட்களுக்குப் பணிப்புகள் விடுத்தல் வேண்டும்.

(2) சொந்தக்காரர் அல்லது உடைமையில் வைத்திருக்கின்ற ஆள் நியாயமான காலத்துக்குள்ளாக அவரது பணிப்புகளுக்கு இணங்கியொழுக முடியாதிருக்கின்றார் எனத் தொல்பொருள் ஆணையாளர் அபிப்பிராயப்படுகின்றவிடத்து அல்லது அத்தகைய பணிப்புரைகள் இணங்கியொழுகப்படமாட்டா என அல்லது அத்தகைய பண்பாட்டுச் சொத்தை உரிமம் ஒன்றில்லாமல் இலங்கைக்கு வெளியே எடுத்துச் செல்லப்பட்டுவிடும் என அவர் அபிப்பிராயப்படுகின்றவிடத்து அவர் சபையின் ஒருப்பாட்டுடன் அத்தகைய சொத்தைத் தமது கட்டுக்காப்புக்குள் எடுத்தல் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின் கீழான கடமைகளைப் புரிவதில் வேண்டுமென்று தொல்பொருள் ஆணையாளரைத் தடுக்கின்ற எவரேனும் ஆள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் நீதிவானொருவர் முன்னரான சுருக்கமுறையான விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ஆயிரம் ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணத்திற்கு அல்லது மூன்று மாதங்களுக்கு மேற்படாத காலப்பகுதிக்கான இருவகையிலொருவகையான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதல் வேண்டும்.

(4) இரண்டாம் உட்பிரிவின்கீழ் ஏதேனும் பண்பாட்டுச் சொத்தைத் தமது கட்டுக்காப்புக்குள் எடுத்ததன்பின்னர் அத்தகைய சொத்தின் சொந்தக்காரர் அல்லது அத்தகைய சொத்தின் கட்டுக்காப்பை அல்லது உடைமையை வைத்திருந்த ஆள் தமது பணிப்புரைகளுக்கு இணங்கியொழுகத் தக்க நிலையில் இப்போது இருக்கின்றாரென அல்லது அத்தகைய பணிப்புரைகளுக்கு இணங்கியொழுகியுள்ளாரெனவும் அத்தகைய சொத்து அழிந்துபோகும், அழிக்கப்படும், துஷ்பிரயோகம் செய்யப்படும் அல்லது அழிய விட்டுவிடப்படும் ஆபத்தில் இல்லையெனவும் தொல்பொருள் ஆணையாளர் திருப்திப்படுகின்றவிடத்து, அவர் சபையின் ஒருப்பாட்டுடன் அத்தகைய சொத்தை அத்தகைய சொந்தக்காரருக்கு அல்லது ஆளுக்குத் திருப்பிக்கொடுக்கலாம்.

(5) இரண்டாம் உட்பிரிவின்கீழ் கட்டுக்காப்புக்குள் எடுக்கப்பட்ட ஏதேனும் சொத்து பகிரங்க வெளிக்காட்டலுக்காக அரும்பெரும் காட்சிச்சாலையொன்றில் காட்சிக்கு வைக்கப்படுவதற்காக தொல்பொருள் ஆணையாளரினால் அரும்பெரும் காட்சிச்சாலைப் பணிப்பாளரிடம் ஒப்படைக்கலாம்.

தொல்பொருள் ஆணையாளரின் தத்துவங்களைப் பிரயோகிக்கும்படி அரசாங்க அதிபர்களுக்கும் வேறு அலுவலர்களுக்கும் அதிகாரமளித்தல்.

26. தொல்பொருள் ஆணையாளர், இச்சட்டத்தின்கீழ் தமது தத்துவங்களுள், கடமைகளுள், அல்லது பணிகளுள் எவற்றையும்—

(அ) ஏதேனும் மாவட்டத்தினுள் அந்த மாவட்டத்தின் அரசாங்க அதிபர்; அல்லது

(ஆ) இலங்கையின் எப்பாகத்திலேனும் தொல்பொருளியல் திணைக்களத்தின் எவரேனும் அலுவலர்,

பிரயோகிக்கும்படி, புரியும்படி அல்லது நிறைவேற்றும்படி பொவாகவோ அல்லது சிறப்பாகவோ அதிகாரமளிக்கலாம்.

## பாகம் VI

### பொது

அலுவலர்களைப் பாதுகாத்தல்.

27. இச்சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட எவரேனும் அலுவலரால் இச்சட்டத்தின்கீழ் தமது கடமைகளைப் புரிகையில் அல்லது தமது பணிகளை நிறைவேற்றுகையில் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட ஏதேனும் செயலுக்காக அவருக்கெதிராகத் துடர்ச்சி அல்லது வழக்கு நடவடிக்கை எதுவும் தொடுக்கப்படலாகாது.

ஒழுங்குவிதிகள்.

28. (1) விதித்துரைக்கப்படவேண்டுமென இச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் கருமம் தொடர்பில் அல்லது எக்கருமம் தொடர்பில் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படவேண்டுமென இச்சட்டத்தால் அதிகாரமளிக்கப்பட்டதோ அக்கருமம் தொடர்பில் அமைச்சர் ஒழுங்கு விதிகளை ஆக்கலாம்.

(2) அமைச்சரால் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது அவ் ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக்கூடிய வாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) அமைச்சரால் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் கசெற்றில் வெளியிடப்பட்ட பின்னர் வசதியாகக்கூடிய விரைவில் அங்கீகாரத்துக்கெனப் பாராளுமன்றத்தின் முன்னர் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதேனும் ஒழுங்குவிதி அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் ஒழித்துவிடப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும். ஏதேனும் ஒழுங்குவிதி ஒழித்துவிடப்பட்டதாகக் கருதப்படும் தேதி பற்றிய அறிவிப்பு கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.

29. இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினுலொழிய— பொருள்கோடல்.

"புராதன நினைவுச்சின்னம்" என்பது இலங்கையில் காணக்கிடப்பனவும் அல்லது இருப்பதும் அல்லது காணப்படுவதும் அத்துடன் நூறு வருடங்களுக்கு மேலாக உள்ளதுமான பின்வரும் பொருட்கள் எதனையும் உள்ளடக்கும் :—

உருவச்சிலைகள், சிற்பக்கற்கள், அல்லது ஒப்பனை செய்யப்பட்ட கல் அத்துடன் எல்லா விவரணத்தினதுமான பளிங்குகள் செதுக்கல்கள், பொறிப்புகள், கல்வெட்டுக்கள், ஓவியங்கள், எழுத்துக்கள், அத்துடன் அவை எப்பொருளின் மீது காணப்படுகின்றனவோ அப்பொருட்கள் மட்பாண்டக்கலை மணிச்சித்திரக்கலை, உலோகக்கலை அத்துடன் புடவைக்கலை என்பனவற்றின் எல்லா உருமாரிகளும் குற்றிநாணயங்கள், இரத்தினக்கற்கள், இலச்சினைகள், பொன் அணிகள், பொன் ஆபரணங்கள், படைக்கலங்கள், ஆயுதங்கள், ஆபரணங்கள், தளபாடங்கள், வீட்டுப் பாவனைப் பொருட்கள் என்பனவும் அசைவுள்ள ஆதனமாகவுள்ள மற்றெல்லாக் கலைப் பொருட்களும் ;

"தொல்பொருளியல் ஆணையாளர்" என்பது தொல்பொருளியல் ஆணையாளராக இருக்க அல்லது செயலாற்ற நியமிக்கப்பட்டுள்ள ஆளைக் குறிக்கும் என்பதுடன் இச்சட்டத்தின் கீழ் தொல்பொருளியல் ஆணையாளரின் ஏதேனும் தத்துவம், கடமை அல்லது பணி தொடர்பாக அதிகாரமளிக்கப்பட்டுள்ள எவரேனும் ஆளையும் உள்ளடக்கும் ;

"பண்பாட்டுச் சொத்தானது" சமய அல்லது லௌகீக ஏதுக்களின் மீதான பண்பாட்டுச் சொத்துக்களை உள்ளடக்கும் என்பதுடன் தொல்பொருளியல் வரலாற்றுக்கு முற்பட்டது, வரலாறு, இலக்கியம், கலை அல்லது அறிவியல் என்பனவற்றுக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் அமைச்சரினுல் குறிப்பாக வரைவிலக்கணமிடப்பட்டவையும் பின்வரும் வகுதிகளுள் ஒன்றைச் சேர்ந்தவையுமானதாகும் :—

(i) தாவரம், விலங்கினம், கனிப்பொருட்கள், உடற்கூறுகள், என்பன பற்றி அருமைப்பாடான சேகரிப்புகளும் உருமாதிரிகளும் ;

(ii) (அ) அறிவியல், தொழில்நுட்பவியல், வரலாறு, இராணுவ சமூக வரலாறு என்பன உட்பட வரலாறு ; அல்லது

(ஆ) தேசியத் தலைவர்கள், சிந்தனையாளர்கள், அறிவியலாளர், அத்துடன் கலைஞர் என்போரின் வாழ்க்கை ; அல்லது

(இ) தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சிகள் தொடர்பான சொத்துக்கள் ;

(iii) தொல்பொருளியல் அகழ்வாராய்ச்சிமூலம் பெறப்பட்ட பொருட்கள் அல்லது தொல்பொருளியல் கண்டுபிடிப்புப் பொருட்கள் ;

(iv) உறுப்பழிந்துபோனவையான தொல்பொருளியல் இடங்களின் அல்லது கலை சார் வரலாறுசார் நினைவுச் சின்னங்களின் மூலக்கூறுகள் ;

(v) பொறிப்புகள், குற்றிநாணயங்கள் நாணயத்தாள்கள், செதுக்கப்பட்ட இலச்சினைகள் என்பன போன்றவையும் நூறாண்டுகளுக்கு மேற்பட்ட பழைமைவாய்ந்தவையுமான தொன்றுகள் ;

(vi) மனிதவின இடைவேறுபாட்டுத் தொடர்புகளுடன் சம்பந்தப்பட்ட பொருட்கள் ;

(vii) முழுக்க முழுக்க கைத்திறனால் தயாரிக்கப்பட்ட படங்களும், ஓவியங்களும், சித்திரங்களும் ;

(viii) உருவச்சிலைகளையும் சிற்பக்கலையும் பற்றிய மூல வேலைப்பாடு ;

(ix) மூலச் சொத்துக்களும், அச்சுக்களும், சிலைப்பதிவுகளும் ;

(x) விசேட அக்கறை ஈர்க்கக்கூடிய அருமைப்பாடான கையெழுத்துப் பிரதிகளும், பழைய புத்தகங்களும், ஆவணங்களும், சித்திரங்களும், படங்களும் வரைப்படங்களும், வெளியீடுகளும் ;

(xi) அரசிறை முத்திரைகளும் இவற்றை ஒத்த வேறு முத்திரைகளும் ;

(xii) சுவடிக்கூடங்கள் ;

(xiii) நூறு வருடங்களுக்கு மேற்பட்ட பழமைவாய்ந்தனவான தளபாடப் பொருட்கள் ; அத்துடன்

(xiv) பழைய இசைக்கருவிகள்.